# டத்தாரான் தொடங்கி கார்கோசா வரையிலான பகுதிகள் புராதன சின்னங்களாக பிரகடனம்

ஷா ஆலம், மார்ச் 2-

மாநகரில் உள்ள டத்தாரான் மெர்டேகா தொடங்கி கார்கோசா வரையிலான எல்லாப் பகுதிகளும் புராதன பகுதிகளாக பிரகடனம் செய்யப்படும் என்று பிரதமர் டத்தோஸ்ரீ இப்ராஹிம் கூறினார். நேற்று காலையில் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது இது குறித்து விவாதிக்கப்பட்டது. கோலாலம்பூர் மாநகராட்சி மன்றம் மற்றும் கஸானா நேஷனல் பெர்ஹாட் ஆகியவற்றின் அதிகாரிகள் இது தொடர்பாக பரிந்துரைகளை முன்மொழிந்தனர்.

இந்த பகுதிகளை கோலாலம்பூர் மாநகர புராதன பகுதிகளாக பிரகடனம் செய்ய வேண்டும் என்று அவர்கள் கேட்டுக் கொண்டனர்.இது பற்றி அமைச்சரவை கவனமாக விவாதித்தது. அதன் பின்னர் அந்த பரிந்துரைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

டத்தாரான் மெர்டேகா தொடங்கி சுல்தான் அப்துல் சாமாட் கட்டடம், கிராத்தாப்பி தானா மெலாயு மற்றும் கார்கோசா ஸ்ரீ நெகாரா கட்டடம் வரையிலான பகுதிகள் புராதன பகுதிகளாக அறிவிக்கப்படும். கோலாலம்பூர் மாநகர புராதன பகுதிகளை பராமரிப்பதற்காக நூறு கோடி



ஒதுக்கப்படுகிறது என்று பிரதமர் தெரிவித்தார்.

நேற்று ஷா ஆலம் நகரில் நடைபெற்ற சிலாங்கூர் மாநில கெஅடிலான் தொகுதிகள், மகளிர் மற்றும் இளைஞர் அணி பேராளர் மாநாட்டை தொடக்கி வைத்து உரையாற்றிய போது அன்வார் இவ்வாறு கூறினார்.

நாட்டில் மலாய் சுல்தான்களின் ஆட்சி காலத்தை போற்றி புகழ வேண்டும் என்பதற்காக சுல்தான் அப்துல் சாமாட் கட்டடத்தை புராதன சின்னமாக பிரகடனம் செய்யப்பட வேண்டும்.

இது குறித்து மேன்மை தங்கிய சிலாங்கூர் ஆட்சியாளர் சுல்தான் ஷராபுடினுக்கு தகவல் தெரிவித்தேன். அவரும் அதற்கு ஆதரவு வழங்கினார். இதனிடையே ஒற்றுமை அரசாங்க ஆட்சியில் மலாய்க்காரர்களுக்கு எந்த உதவிகளும் வழங்கப்படவில்லை என்று எதிர்க்கட்சிகள் கூறுவதில் உண்மை எதுவும் கிடையாது என்றார் அன்வார்.

இந்த மாநாட்டில் கெஅடிலான் துணைத்தலைவர் ரபிஸி ரம்லி, உதவித்தலைவர் அமிருடின் ஷாரி, மகளிர் அணி தலைவர் ஃபட்லினா சீடேக், இளைஞர் அணித் தலைவர் அடாம் அட்லி மற்றும் தகவல் பிரிவு தலைவர் ஃபாமி ஃபட்சில் ஆகியோர் கலந்து கொண்டனர்.